# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,
## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தச்) சட்டம்

---

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, செத்தெம்பர் மாதம் 08 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,**
**சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு**
**(திருத்தச்) சட்டம்**

[2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 54/2022

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்திற்கான முதலாம் அட்ட வணையைத் திருத்துதல்

**2.** இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் பாகம் Iஅ இல் -

(அ) 23 ஆம் விடயத்தில், ‘‘அத்தகைய பொருள்; அத்துடன்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘அத்தகைய பொருள்;’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) 24 ஆம் விடயத்தில், ‘‘எந்திரத்தொகுதி அல்லது சாதனம்.’’ என்னும் சொற்களக்குப் பதிலாக, ‘‘எந்திரத்தொகுதி அல்லது சாதனம்;’’ என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) 24 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வுவரும் புதிய விடயங்களைச் சோப்பதன் மூலமும்:-

‘‘25. சுங்க நோக்கத்துக்காக ஒத்திசைவாக் கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் குறியீட்டிலக்கங்களின்கீழ் அடை யாளங்காணப்பட்டதும் இறக்குமதியின்

மீது 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழான உற்பத்தித் தீர்வைக்குப் பொறுப்பாக்கப்பட்டதுமான ஏதேனும் மோட்டார் வாகனம்;

26. மாற்றுத்திறனாளிகளாகவுள்ள ஆட்களினால் பயன்படுத்தப்படும் சாதனம்;

27. வெளிநாட்டு நாணயம் ஒரு வங்கிக்கூடாக இலங்கைக்கு அனுப்பப்படுவதாகவிருப்பின், அத்தகைய வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காக, கடினமான பதப்படுத்தப்படாத இரத்தினக் கற்களை வெட்டி மெருகூட்டுவதன்மேல் அத்தகைய இரத்தினங்களை மீள ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்துள்ள ஆளொருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய கடினமான பதப்படுத்தப்படாத இரத்தினக் கற்கள்;

28. தீர்வையற்ற கடைகளில் விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருள்; அத்துடன்

29. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லிலிருந்து தயாரிக்கப்பட்ட அரிசி.";

(2) அதன் பாகம் II இல் -

(அ) 1 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்;-

"1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் வழங்கப் பட்ட விநியோக உரிமமொன்றை வைத் துள்ள எவரேனுமாளினால் மின்சாரம் வழங்கப்படுவதனைத் தவிர, மின்சாரத் தைப் பிறப்பாக்கஞ்செய்தலும் மின் சாரத்தை வழங்குதலும்;";

(ஆ) 22 ஆம் விடயத்தில், "வழங்கப்பட்ட சேவைகள்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்கப்பட்ட சேவைகள்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) 23 ஆம் விடயத்தில், "ஏதேனும் சேவை." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் சேவை; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) 23 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"24. இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் வழங்கப் பட்ட வான் போக்குவரத்துச் சேவை உரிமமொன்றை வைத்துள்ள எவரேனும் பொது விற்பனைகள் முகவரினால் வழங் கப்படும் சேவைகள்.".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*